ஆவியோடும் உண்மையோடும்
ஆண்டவரை தொழுதிடுவோம்
பாரிசுத்த அலங்காரத்துடனே நாமே
பரிசுத்தரை தெழுவோமே

நடுக்கத்தோடும் பயபக்தியோடும்
கர்த்தரில் களி கூருவோம்
பணிந்து குனிந்து தலைகள் தாழ்த்தி
பாதம் பணிந்திடுவோம்
அவர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிச்தரே
பரிசுத்தரிடம் பாவம் இல்லையே
அவர் பரிசுத்தம் எல்லையில்லையே

ஆர்வத்தோடும் ஆனந்தத்தோடும்
சந்நிதி வாருங்களே
கர்த்தரே தேவன் மகா ராஜன்
என்று சொல்லுங்களேன்
அவர் வாசலில் துதியோடும் புகழ்ச்சியோடும்
வந்து கீர்த்தனம் பண்ணுங்களேன்
துதிபலிகளை செலுத்துங்களே

உதட்டில் அல்ல உள்ளத்தில் இருந்து
ஸ்தோத்திர பலியிடுங்கள்
ஒன்று கூடி ஒருமனமாய் படிப் புகழ்ந்திடுவோம்
அவரே தேவன் நாம் அவர் ஆடுகள்
அவர் சத்தியம் கேளுங்களேன்
அதில் என்றென்றும் நிலைத்திருங்கள்